Distribution of coffee seeds

*252 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the arrangements that have been made to distribute coffee seeds to the residents of Madras ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பெங்களூரில் தலைமையிடத்தைக் கொண்ட காப்பி வாரியம் காப்பிக்கொட்டைகள் வழங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்கிறது. இதில் மாநில அரசாங்கத்திற்கு எத்தகைய பொறுப்பும் இல்லை.

திரு கே. விநாயகம் : அது ஒருவேளை ஆல் இண்டியா காஃபி போர்டு வேலையாக இருக்கலாம். சென்னையிலே காஃபி சீட்ஸ் மக்களுக்குக் கொடுப்பது யார் ? அது அத்திய வசியமாக இருப்பதாலே காஃபி வாரியமே எவ்வளவு இந்த நாட்டு மக்களுக்கு வேண்டும் என்று தெரிந்து அந்த அளவுக்கு ஸ்டாக் வரவழைத்து அவர்களுடைய ஏஜென்சி மூலமாக ஒழுங்காகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சென்னை அரசாங்கம் சென்னைக்கு எவ்வளவு வழங்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறது. காஃபி போர்டு மத்திய அரசுக்கு அது சம்பந்தமாக சிபார்சு செய்திருக்கிறது.

Boat Building Yard

*253 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether there is any proposal under the consideration of the Government to shift the Boat Building Yard from Marina ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆம்.

திரு. டி. மார்டின் : படகுகளை அரசு வழங்குகின்ற பொழுது ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள் குழுத் தலைவர்களோடு. ஆனால் ஒப்பந்தங்களை மீறுகின்ற நேரத்தில் தகராறுகள் ஏற்பட்டால் படகுகளை உபயோகப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. எனவே, அப்படிப்பட்ட தகராறுகள் ஏற்படுகிற பொழுது அந்தத் தகராறுகளைத் தீர்க்கின்ற முறையில் அந்தப் படகுகளையும் நல்ல முறையில், வேலை செய்யக் கூடிய முறையில் வழி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஒரு திட்டம் கொண்டு வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது மெரீனா கடற்கரையில் போட் யார்ட் பற்றிய கேள்வி. கனம் அங்கத்தினர் கேட்கிற கேள்விக்கும் மூலக் கேள்விக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை.

திரு வ. ஜார்ஜ் : அமைச்சர் அவர்கள் படகு கட்டும் துறையை மாற்றப் போவதாகக் கூறினார்கள். அப்படிச் செய்யும் பொழுது குடிசைகளையும் கல்லறைத் தோட்டங்களையும் அப்புறப்படுத்திக் கடற்கரையை நல்ல முறையிலே பாதுகாக்க முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பாதுகாப்பு செய்யப்படுகிறது.

திரு. கே. விநாயகம் : மெரீனா கடற்கரையில் உள்ள போட் பில்டிங் யார்டை எந்தக் காரணத்திற்காக அகற்றுகிறார்கள் ? எந்த இடத்திலே அதை அமைக்க உத்தேசம் இருக்கிறது ? இதன் விளைவுகள் என்ன ? ஏற்கனவே வாழ்ந்து வருகிற மீனவர்களுடைய போட் பில்டிங் ஆக்டிவிடீஸில் நீங்கள் தலையிடுவது நியாயம் தானா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் இரண்டு கேள்விகளைக் கேளுங்கள் !

திரு. கே. விநாயகம் : எல்லாம் ஒன்றுதான், பெரந்திலிஸ்தான்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மெரினா போட் பில்டிங் யார்டை இன்னொரு இடத்திற்கு, அதாவது எண்ணூருக்கு மாற்றுவதாக அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. கனம் உறுப்பினர் அங்கே மீனவர்கள் வாழ்வதாகச் சொன்னார்கள். அந்த போட் பில்டிங் யார்டிலே மீனவர்கள் வாழ்வதாகத் தெரியவில்லை. எண்ணூரிலே அதிக செலவாகும் என்ற காரணத்தினாலே தற்காலிகமாக ராயபுரத்திற்கு மாற்றுவதாக அரசாங்கம் இருக்கிறது. அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு வேலை இழப்பு நிச்சயமாக ஏற்படாது.

Expansion of Madras Harbour.

*254 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state :

(a) whether the Government are aware that the expansion of Madras Harbour on the northern side will affect the landing of the marine catches, beaching of catamarans and country boats, mending and drying of nets by the fishermen of Royapuram ; and

(b) if so, the steps taken to protect the rights of age-old fishermen ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) ராயபுரத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் பிடித்த மீன்களைக் கரை சேர்ப்பதற்கும் கட்டுமரங்களையும் நாட்டுப் படகுகளையும் கரையில் கொண்டுவந்து சேர்ப்பதற்கும், வலைகளை உலர்த்துவதற்கும் பழுது பார்ப்பதற்கும், பயன்படுத்துவதற்காக மாற்று நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. விசைப் படகுகளை நிறுத்தி வைப்பதற்கு தமிழ் நாடு துறைமுகப் பொறுப்பாணைக் கழகத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மீனவர்களுக்கு மீனளத்துறை இயக்குநரிடமிருந்து போதிய நிதி உதவி கிடைக்கும்.

திரு. கே. விநாயகம் : ராயபுரத்திலே பழம் காலத்திலிருந்தே மீனவர்கள் அதைப் பயன்படுத்தி வந்தார்கள். அங்கிருப்பதை அகற்றக் கூடாது என்று அரசாங்கத்திற்கு அவர்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்களா ? அந்தக் கோரிக்கைமீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? இப்பொழுது இருப்பதை எந்த இடத்திற்கு மாற்றுகிறார்கள் ? அந்த இடம் எவ்வளவு தூரம் இருக்கிறது ராயபுரத்திலிருந்து ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்பொழுதுள்ள துறைமுகத்தை வட பகுதிக்கு எக்ஸ்டெண்ட் செய்கிற முறையிலே எண்ணெய்க் கப்பல்களிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு ஏற்ற முறையிலே வசதியாக இருக்கும் பொருட்டு விஸ்தரிப்புச் செய்யப்படுகிறது. அங்குள்ள மீனவர்கள் அதற்கு ஆட்சேபனை செய்திருக்கிறார்கள். ஆனால் மாற்று இடம் அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அந்த 200 குடும்பங்களுக்கு புது வாழ்வு அளிக்கின்ற வகையிலே 1,000 ரூபாய் வழங்க தமிழ்நாடு மீனளக் கழகம் ஏற்பாடு செய்திருக்கிறது. மீனளத் துறை இயக்குநருக்கு 2 இலட்ச ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதனாலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்ற வகையில் காசிமேடு, புதுமனைக்குப்பம் போன்ற பகுதிகளில் படகுகளை நிறுத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. விசைப் படகுகளை ஹார்பரிலேயே நிறுத்துவதற்கு வேண்டிய வசதிகளும் செய்யப்படுகின்றன.

Dr. H. V. HANDE : In answer to the main question, the Hon. Minister said that the harbour is going to be extended to the northern side. What are the number of berths available in the entire harbour and how many extra berths are going to be created in the northern side and may I know whether this will be coming